

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 254 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 12 – சனிக்கிழமை 25 ஏப்ரல் 2026 – வெளியீூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 254 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 12 - Saturday 25 April 2026 - Dak 8 Pages ₹ 5.00


### ஜனநாயகத்தைப் பாதுகாத்திட

## தமிழ்நாட்டு வாக்காளர்கள் ஆற்றியுள்ள பங்களிப்பு மகிழ்ச்சியளிக்கிறது!

### தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘ட்விட்டர்’ பதிவு!




சென்னை, ஏப்.25-

ஜனநாயகத்தைப் பாதுகாத்திட தமிழ்நாட்டு வாக்காளர்கள் சரிவர ஆற்றியுள்ள பங்களிப்பு மகிழ்ச்சியளிக்கிறது என தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் முதல்வர் அவர்கள் தெரிவித்திருப்பதாவது :-

**தமிழ்நாடு தேர்தல் 2026 ஜனநாயகத் திருவிழா : சாதனை வாக்குப்பதிவு; பாராட்டுக்குரிய மக்களின் பொறுப்புணர்வு!**

**எப்போதும் போல பெரிய அசம்பாவிதங்கள் ஏதுமின்றி அமைதியான முறையில் நடந்து முடிந்துள்ளது தமிழ்நாடு தேர்தல்.**

**84.69% என்ற சாதனை அளவில் வாக்களித்து, ஜனநாயகத்தைப் பாதுகாத்திடும் கடமையைத் தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்கள் சரிவர ஆற்றியுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.**

**சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் பலர் நீண்ட தூரம் பயணித்து வந்து வாக்களித்து விட்டு, இன்றிரவே மீண்டும் கிளம்பி, அவரவர் பணியாற்றும் ஊர்களுக்குச் செல்கின்றனர்.**

**“ஒரு வாக்குதானே” என எண்ணாமல், “ஒரு தலைமுறைக்கான தேர்தல் இது” என்ற நினைப்பே இந்த உந்துதலுக்குக் காரணமாக இருக்க முடியும். அத்தகைய பொறுப்புள்ள குடிமக்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகள்.**

**தமிழ்நாடு வாக்களித்துவிட்டது, மே 4 தமிழ்நாடு வெல்லும்!**

**#வெல்வோம்_ஒன்றாக!**

இவ்வாறு தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### என் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அண்ணனாக உடனிருந்து வழிகாட்டிய

## முரசொலி செல்வத்தின் நினைவுகளைப் போற்றுகிறேன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கம்!

**சென்னை, ஏப். 25-**

**முரசொலி செல்வம் அவர்களுக்கு நேற்றைய தினம் பிறந்த நாள் ஆகும்.**

**இந்நாளையொட்டி, கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று, சென்னை கோடம்பாக்கம் “முரசொலி” வளாகத்தில் அமைந்துள்ள முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவுச்சிலைக்கு மாலை அணிவித்து திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.**

**இந்நாளில் கழகத் தலைவர் அவர்கள் விடுத்துள்ள வலைதளப் பதிவில், “என் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அண்ணனாக உடனிருந்து வழிகாட்டிய முரசொலி செல்வம் அவர்களது நினைவுகளைப் போற்றுகிறேன்” என்று உருக்கமுடன் குறிப்பிட்டுள்ளார்.**



அதன் விவரம் வருமாறு :-

திராவிட இயக்கக் கொள்கைச் சிங்கம் முரசொலி செல்வம் அவர்களின் பிறந்தநாள் இன்று. இதனையொட்டி சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள முரசொலி அலுவலகத்தில் அமைந்திருக்கும் முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார். அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவப் படத்திற்கும் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி., டாக்டர் எழிலன் நாகநாதன் எம். எல். ஏ., முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் கே.இராஜமாணிக்கம், இ.ஆ.ப. (ஓய்வு), ‘முரசொலி’ பொது மேலாளர் ஆர். இராஜசேகரன், ‘முரசொலி’ செய்தி ஆசிரியர்கள் கே.சேது, இள.மதியழகன், ‘முரசொலி’ துணை ஆசிரியர் மு.முத்தையா, ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து முதல்வர் அவர்கள் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**திராவிட முரசொலித்த கொள்கைச் செல்வத்தின் பிறந்தநாள்.**

**தலைவர் கலைஞரின் நிழலில் வளர்ந்து, எனக்கு நிழலாய் இருந்தவர் அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள்!**

**பதவிகளையோ விளம்பரங்களையோ விரும்பியவரும் அல்லர், அதிகாரத்தைப் பயன்படுத்திச் சிறையிலடைத்த போது அஞ்சவும் செய்யாதவர். சிலந்தியாய் எழுத்துவலை பின்னி எதிரிகளைச் சிக்க வைத்தவர்.**

**என் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அண்ணனாக உடனிருந்து வழிகாட்டிய முரசொலி செல்வம் அவர்களது நினைவுகளைப் போற்றுகிறேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### நடந்து முடிந்த – சட்டப்பேரவைத் தேர்தலில்

## தமிழ்நாட்டில் 84.51 சதவிகித வாக்குப்பதிவு!

சென்னை, ஏப்.25-

தமிழ்நாட்டில் இதுவரை இல்லாத அளவுக்கு வாக்கு சதவிகிதம் கூடியதற்கு காரணம் என்ன என்பது குறித்து பரபரப்பு தகவல்கள் வெளியாகியுள்ளது. தமிழ்நாட்டில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்கு (எஸ்.ஐ.ஆர்.) பிறகு 43 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். தற்போது எஸ்.ஐ.ஆருக்கு பிறகு தமிழகத்தில் 5 கோடியே 73 லட்சத்து 43 ஆயிரத்து 291 வாக்காளர்கள் உள்ளனர். தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலில், வாக்குப்பதிவு சதவிகிதம் 85 சதவீதம் வரை பதிவாகியுள்ளது.

இதற்கு எஸ்.ஐ.ஆர். காரணமா அல்லது மற்ற தேர்தலை விட இந்த தேர்தலில் அதிக கட்சிகள் போட்டியிடுவதால், அதிகம் பேர் ஆர்வமாக வந்து வாக்களித்தது காரணமா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஆனால், எஸ்.ஐ.ஆர். (வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம்) தான் வாக்கு சதவிகிதத்திற்கு அதிகரித்திருப்பதற்கு காரணம் என்று கூறப்படுகிறது.

காரணம், தமிழ்நாட்டில் இறந்தவர்கள், இடம் மாறியவர்கள், ஒரே நபர் இரண்டு அல்லது மூன்று இடங்களில் வாக்காளர் அடையாள அட்டைகள் வைத்து ஏமாற்றியது கண்டறியப்பட்டு எஸ்.ஐ.ஆர். மூலம் அதிரடியாக தேர்தல் ஆணையம் நீக்கியது. தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாடுகள் அதிகரித்துள்ளதால், கள்ள ஓட்டு போடுவது என்பது முடியாத காரியமாகும். அதனால், தற்போது வாக்காளர் பட்டியல் திருத்தம் காரணமே வாக்கு சதவிகிதம் அதிகரித்ததற்கு காரணமாகும். இதற்கு முன்பாக கடந்த சில தேர்தல்களில் தமிழ்நாட்டில் நடைபெற்ற தேர்தலில் வாக்கு சதவிகிதம் எவ்வளவு பதிவானது என்ற விவரங்களைப் பார்க்கலாம்.

✷ தமிழ்நாட்டில் கடந்த 11 தேர்தல்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் 2011ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின் போது தான் அதிகபட்சமாக 78.29 சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளன. அதற்கு அடுத்தபடியாக இந்த (2026) தேர்தலில்தான் அதிகபட்சமாக 85.14 சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளன.

குறைவு என்று பார்த்தால் 2001ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் வெறும் 59.07 சதவிகித வாக்குகளே பதிவாகியிருந்தன. இதுவரை அதிகபட்சமாக உள்ள 78.29 சதவிகிதம் என்ற சாதனையை இந்த தேர்தல் முறியடித்துள்ளது. மேலும், இந்த தேர்தலில் இளைஞர்கள் அதிக அளவில் வாக்களிக்க ஆர்வம் காட்டுவதும், வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த பணிகளால் இலட்சக்கணக்கான வாக்குகள் நீக்கப்பட்டு இருப்பதாலும் வாக்கு சதவிகிதம் அதிகரித்துள்ளது. அதன்படி, தற்போது நடைபெற்ற தேர்தலில் வாக்கு சதவிகிதம் 85ஆக உயர்ந்துள்ளது.

**✷ சட்டப்பேரவை தேர்தலில் ஆண்டு வாரியாக வாக்கு சதவிகிதம்**

1951 - 54.75%
1957 - 46.56%
1962 - 70.65%
1967 - 76.57%
1971 - 72.10%
1977 - 61.58%
1980 - 65.42%
1984 - 73.47%
1989 - 69.69%
1991 - 63.84%
1996 - 66.95%
2001 - 59.07%
2006 - 70.56%
2011 - 78.29%
2016 - 74.81%
2021 - 73.63%
2026 - 85%

**✷ மாவட்ட வாரியாக பதிவான வாக்குகள் முழு விவரம்:**

மாவட்டம் – சதவிகிதம்
சென்னை - 83.73%
திருவள்ளூர் - 83.76%
காஞ்சிபுரம் - 87.39%
செங்கல்பட்டு - 85.39%
கோவை - 84.76%
மதுரை - 80.55%
திருச்சி - 85.43%
அரியலூர் - 87.41%
கடலூர் - 85.49%
தர்மபுரி - 90.13%
திண்டுக்கல் - 89.22%
ஈரோடு - 90.10%
கள்ளக்குறிச்சி - 88.33%
கன்னியாகுமரி - 75.61%
கரூர் - 92.62%
கிருஷ்ணகிரி - 85.31%
மயிலாடுதுறை - 82.14%
நாகை - 86.30%
நாமக்கல் - 90.21%
பெரம்பலூர் - 85.50%
புதுக்கோட்டை - 83.90%
ராமநாதபுரம் - 77.03%
ராணிப்பேட்டை - 89.89%
சேலம் - 90.74%
சிவகங்கை - 76.66%
தென்காசி - 82.40%
தஞ்சாவூர் - 80.63%
நீலகிரி - 78.96%
தேனி - 81.55%
திருவாரூர் - 83.71%
தூத்துக்குடி - 80.55%
திருநெல்வேலி - 77.94%
திருப்பத்தூர் - 88.96%
திருப்பூர் - 88.59%
திருவண்ணாமலை - 89.59%
வேலூர் - 88.76%
விழுப்புரம் 89.00%
விருதுநகர் - 84.89%

## எரிபொருள், உரப் பாதுகாப்பை உறுதி செய்வதில் - மோடி இரட்டைத் தோல்வி!

### கார்கே குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, ஏப்.25-*

*இந்தியாவுக்கான எரிபொருள், உர பாதுகாப்பை உறுதி செய்வதில் மோடி அரசு இரட்டைத் தோல்வி அடைந்துள்ளது என்றும், தனது தோல்விகளை ‘தொகுதி மறுவரையறை நாடகங்கள்’ மூலம் திசைதிருப்ப முயல்கிறது என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டினார். டெல்லியில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் பேசிய முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரளி மனோகர் ஜோஷி, இந்தியா இனி விஷ்வகுரு அல்ல என்றும் இந்த பதத்தை பயன்படுத்தக் கூடாது. சமஸ்கிருதத்தை இந்தியாவின் அலுவல் மொழியாக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.*



*இந்த நிலையில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே நேற்று முன்தினம் எக்ஸ் தளத்தில் பதிவிடுகையில்,’ மோடி அரசு தனது தோல்விகளையும், எப்ஸ்டீன் மீதான கடுமையான குற்றச்சாட்டுகளையும் தொகுதி எல்லை நிர்ணய நாடகங்கள் மூலம் திசை திருப்ப முயன்றது. ஆனால் இந்தியா அந்த நாடகத்தை கண்டுகொண்டது. தேசத்திற்கான எரிபொருள் மற்றும் உரப் பாதுகாப்பை உறுதி செய்வதில் பா.ஜ.க. இரட்டை தோல்வி பெற்றுள்ளது எரிபொருள் இறக்குமதி பல்வகைப்படுத்தல் தோல்வியடைந்துள்ளது.*

*ஹார்முஸ் ஜலசந்தியில் உள்ள நமது கப்பல்களால் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ள முடியவில்லை. இந்திய கொடி ஏற்றப்பட்ட 14 கப்பல்கள் கடந்த 54 நாட்களாக அங்கு சிக்கியுள்ளன. மோடி அரசின் செயல்பாடுகளினால், 2025-26ல் இந்தியாவின் கச்சா எண்ணெய் உற்பத்தி தொடர்ந்து 11வது ஆண்டாக சரிந்து வருகிறது. 2014-15ல் இருந்து ஒட்டுமொத்த கச்சா எண்ணெய் உற்பத்தி கிட்டத்தட்ட 22% சரிந்துள்ளது. எனவே இந்தியா இனி விஷ்வகுரு அல்ல என்று சொன்ன அவரது கட்சியை சேர்ந்த ஜோஷியின் கருத்தை மோடி ஏற்று கொள்ள வேண்டும்’ என்று குறிப்பிட்டுள்ளார்.*